# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| | | |
|---|---|---|
| தரம் : 08 | வரலாறு<br>பெயர் / சுட்டெண் : ............................................. | நேரம் :<br>2.30 மணித்தியாலம் |

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. புராதன கிரேக்க, உரோமப் பண்பாட்டின் பெறுமதி வாய்ந்த நூல்களைக் கொண்டிருந்த மிகப்பெரிய நூலகம் அமைந்திருந்த நகரம்.
 1) வெனிஸ் 2) லண்டன் 3) கொன்ஸ்தாந்திநோபிள் 4) பாரிஸ்

02. "ஸ்ரீவர்த்தனபுர" என அழைக்கப்பட்ட இராச்சியம்.
 1) கோட்டை 2) கண்டி 3) சீதாவக்கை 4) யாழ்ப்பணம்

03. போர்த்துக்கேயரின் கீழைத்தேய மத்திய நிலையம்
 1) கோவா 2) பத்தேவியா 3) கல்கத்தா 4) பாண்டிச்சேரி

04. பின்வரும் விடயங்களைத் தொடர்புபடுத்தும் போது உரிய ஒழுங்கில் அமைந்த விடை எது?
 1) லியனாடோ டாவின்ஸி A - புனித ஜோர்ஜின் உருவம்
 2) ரபாயேல் B - இறுதித் தீர்ப்பு
 3) மைக்கல் ஆஞ்சலோ C - மொனாலிசா
 4) டொனெடெலோ D - எதென்ஸ் பாடசாலை
 1) BCDA 2) CDBA 3) CDAB 4) BACD

05. கண்டி இராச்சியத்தின் அரசரின் தனிப்பட்ட பாதுகாப்புக்குப் பொறுப்பான செயலாளர்.
 1) மடுவேலேக்கம் 2) வெடிகாரலேக்கம்
 3) பத்வடனலேக்கம் 4) அதபத்துவே லேக்கம்

06. "நாங்கள் வாசனைத் திரவியத்தையும் கிறிஸ்தவர்களையும் தேடி வந்தோம்" எனக் கூறியவர்.
 1) வாஸ்கொடகாமா 2) பார்த்தலோமியஸ் டயஸ்
 3) அமெரிக்க வெஸ்புஸி 4) பேர்டினன் மகலன்

07. ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ் ஆகிய பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ள இடம்.
 1) இத்தாலி 2) பிரான்ஸ் 3) இங்கிலாந்து 4) கிரேக்கம்

08. பின்வரும் பிரசித்தி பெற்ற இடங்களுக்குப் பொருத்தமான உற்பத்திகளைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதி.
 1) கொத்மலை A - பாய் உற்பத்தி
 2) கிரிவவுல B - இரும்புப் பொருட்கள்
 3) தும்பறை C - பித்தளை உற்பத்தி
 1) BCA 2) BAC 3) ABC 4) ACB



kalvi.lk

09. கோட்டை இராசதானியைச் சூழவுள்ள ஆறுகள்.
1) மகா ஓயா, மீ ஓயா
2) கல்லோயா, மகா ஓயா
3) கொலன்னா ஓயா, தியவன்ன ஓயா
4) கிரிந்தி ஓயா, தியவன்ன ஓயா

10. தந்துரே போரில் போர்த்துக்கேயப் படைகளை தோல்வியுறச் செய்தமை, குசமாசன தேவியை தனது மனைவியாக்கியமை போன்ற சம்பவங்களுடன் தொடர்புடைய மன்னன்.
1) 1ம் இராஜசிங்கன்
2) 1ம் விமலதர்ம சூரியன்
3) 2ம் விமலதர்ம சூரியன்
4) 2ம் இராஜசிங்கன்

11. வானியல் விஞ்ஞானத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்.
1) கலிலியோகலிலி
2) ஐசாக் நியூற்றன்
3) பெரசல்சஸ்
4) நிக்கலஸ் கொப்பனிக்கஸ்

12. போர்த்துக்கேயர் இலங்கையில் வந்திறங்கிய இடம்.
1) காலி
2) திருகோணமலை
3) மன்னார்
4) மட்டக்களப்பு

13. ரந்தெனிவெல, கன்னொருவப் போர்களை முறியடித்த கண்டி இராச்சிய மன்னன்.
1) 2ம் விமலதர்ம சூரியன்
2) 2ம் இராஜசிங்கன்
3) மாயாதுன்னை
4) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

14. " இளவரசன், யுடோப்பியா" ஆகிய நூல்களை எழுதியவர்கள்.
1) தோமஸ் மூர், பிரான்சிஸ்பேகன்
2) தாந்தே, பிரான்சிஸ் பெட்ராக்
3) நிக்கொலாய் மாக்கியவலி, பிரான்சிஸ்பேகன்
4) நிக்கொலாய் மாக்கியவலி, தோமஸ் மூர்

15. " சென் லோறன்ஸ் நகர்" என்னும் பெயரால் குறிப்பிடப்பட்ட நகரம்.
1) கண்டி
2) நல்லூர்
3) கொழும்பு
4) கம்பளை

16. கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்ற பிரித்தானிய ஆளுநர்
1) தோமஸ்மெயிட்லண்ட்
2) றொபேட்பிறன்றிக்
3) பிரட்ரிக் நோர்த்
4) கிரகரி

17. பிலிப்பைன்ஸ் தீவுகளில் வந்திறங்கிய நாடுகாண் பயணி.
1) பேர்டினன்ட் மகலன்
2) பார்த்தலோமியஸ் டயஸ்
3) கிறிஸ்தோப்பர் கொலம்பஸ்
4) வாஸ்கொடகாமா

18. போர்த்துக்கேயர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட உணவு.
1) கேக், பணிஸ், ரொட்டி
2) நூடில்ஸ், வைன், அச்சாறு
3) பாண், பட்டர், கேக்
4) பாண், வைன், சலாது

19. மறு மலர்ச்சிக் காலத்தில் இருந்த நிலமைகளில் ஒன்று.
1) சமய ஒற்றுமை
2) வர்த்தகவிருத்திப் பணப்புழக்கம்
3) அதிகாரப் பரவலாக்கம்
4) சுய பூர்த்திப் பொருளாதாரம்

20. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் பொழுது யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன்.
1) சங்கிலி
2) செனரத்
3) பரராசசேகரம்
4) செகராசசேகரம்



kalvi.lk

## பகுதி - II

**பகுதி II இல் 1 ஆம், 2 ஆம் வினாக்கள் உட்பட,
எல்லாமாக 6 வினாக்களுக்கு விடை தருக.**

01. 2ம் தவணையில் வரலாற்றுப் பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீடுகள் தொடர்பாக விடை தருக.

1) 2 ஆம் தவணையில் வரலாற்றுப் பாடத்தில் நீர் செய்த கணிப்பீடுகள் எவை?

2) இக் கணிப்பீட்டினை செய்வதற்காக பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் 2 தருக?

3) இக் கணிப்பீட்டினைச் செய்வதற்காக ஆசிரியர் வழங்கிய அறிவுறுத்தல்கள் 2 தருக?

4) இக் கணிப்பீட்டிற்குத் தேவையான தகவல்களை எங்கே பெற்றீர்?

5) இக் கணிப்பீட்டினை மேற்கொண்டதன் மூலம் நீர் அடைந்த நன்மைகள் 2 தருக?

(5 x2 =10 புள்ளிகள்)

02. தரப்பட்ட உலகப்படத்தைப் பயன்படுத்தி பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.

1) பிரித்தானியா
2) கொன்ஸ்தாந்திநோபிள்
3) நன்னம்பிக்கை முனை
4) போத்துக்கல்
5) மகலன் தொடுகடல்
6) ஸ்பானியா
7) கள்ளிக்கோட்டை
8) மடகஸ்கார்
9) பிலிப்பைன்ஸ் தீவுகள்
10) மத்திய தரைக்கடல்

(10 x 1 =10 புள்ளிகள்)

03. 1) கண்டி இராட்சியத்தை ஆட்சி செய்த நாயக்க அரச வம்ச மன்னர்கள் 2 பேரைத் தருக?

2) கண்டி இராச்சியத்தில் காணப்பட்ட வெவ்வேறு பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட நிலங்கள் 2 ஐத் தருக?

3) கண்டி கால ஓவியங்களைப் பார்வையிடக் கூடிய விகாரைகள் 3 தருக?

4) 1ம் விமலதர்ம சூரியனின் சமயப் பணிகள் 3 தருக?

(2 + 2 + 3 +3 =10 புள்ளிகள்)

04. 1) மறுமலர்ச்சி என்றால் என்ன?

2) மறுமலர்ச்சிக் காலக் கலைஞர்களுக்கு ஆதரவு வழங்கிய பாப்பரசர்கள் 2 பேரை எழுதுக?

3) பின்வரும் கலையம்சங்களுடன் தொடர்புபட்ட கலைஞர்களை எழுதுக?

(a) யேசுவின் இறுதி இராப்போசனம்
(b) கன்னி மரியாள் ஓவியம்
(c) மெடிசியின் கல்லறை

4) மறுமலர்ச்சியின் விளையாக ஏற்பட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் 6 ஐக் குறிப்பிடுக.

(2 + 2 + 3 + 3 =10 புள்ளிகள்)



kalvi.lk

05. 1) கீழைத்தேசத்திற்கு வருகை தந்த ஐரோப்பிய இனத்தவர்கள் மூவரைத் தருக?

2) கோட்டை இராச்சிய மன்னர்கள் அழைக்கப்பட்ட அடைமொழிகளைத் தருக?

3) கி.பி 1505ஆம் ஆண்டில் இலங்கையில் காணப்பட்ட 3 இராச்சியங்களும் எவை?

4) விஜயபாகு கொள்ளையின் பின்னர் கோட்டை இராச்சியப் பிரிவுகளையும், அதன் மன்னர் களையும் எழுதுக?

(2 + 2 + 3 + 3 =10 புள்ளிகள்)

06. 1) மறுமலர்ச்சிக் காலத்தில் தேசிய அரசுகள் எழுச்சியடைந்த நாடுகள் 4 தருக?

2) நாடுகாண் பயணங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய 2 மன்னர்களை எழுதுக?

3) பின்வரும் நாடுகாண் பயணிகள் சென்றடைந்த இடங்களை எழுதுக?

(a) பார்த்த லோமியஸ்டயஸ்

(b) கப்ரால்

(c) ஹென்றி ஹட்சன்

4) மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றம் ஒன்றை குறிப்பிட்டு விளக்குக?

( 2 + 2 + 3 + 3=10 புள்ளிகள்)

07. 1) இந்துசமுத்திரத்திலுள்ள முக்கிய துறைமுகங்கள் 4 தருக?

2) போர்த்துக்கேயர் சார்பாக சமயத்தைப் பரப்ப வந்த இரு சபைகளும் எவை?

3) பின்வரும் போர்களில் பங்குபற்றிய போர்த்துக்கேயத் தளபதிகளைக் குறிப்பிடுக?

(a) முல்லேரியாப் போர்

(b) தந்துரே போர்


(c) பலன போர்

4) போர்த்துக்கேயர் வருகையால் இலங்கையில் வைத்தியத் துறையில் ஏற்பட்ட மாற்றம் ஒன்றைக் குறிப்பிட்டு விளக்குக?

(2 +2 + 3 + 3 =10 புள்ளிகள்)



kalvi.lk



kalvi.lk



Education கல்வி අධ්‍යාපන

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**



Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page